மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM ජාතිකය

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

தரல்: 109 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஞாயிற்றுக்கிழமை 17.12.2023 | பக்கங்கள் 08



# இனவாதத்தைத் தூண்ட பொலிஸார் முயற்சி! கஜேந்திரகுமார் (எம்.பி) குற்றச்சாட்டு!!

**இனவாதத்தைத் தூண்டிவிட்டு தமிழர்களின் உரிமையினை மறுப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துவருவதை மட்டக்களப்பு மயிலத்தமடு சம்பவம் நிரூபித்துள்ளதாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

பக்கம்-02

# மகிந்தவின் சூளுரை மீண்டெழ முடியாத வலியின் வெளிப்பாடு!

**வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ்**



பக்கம்-02

## தமிழரசுக் கட்சி உடையுமா?



நிலாந்தன்

தமிழரசுக் கட்சிக்குள், தலைவருக்கான ஒரு தேர்தல் நடந்தால்,அது தமிழரசியலின் ஜனநாயகச் செழிப்பை நிரூபிக்குமா? அல்லது தேசத் திரட்சியை உடைக்குமா?

பக்கம்-06

## இந்தியப் பெருங்கடல் பாதுகாப்புத் தலைமையகம் இலங்கையில்!



பக்கம்-02

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்புத் தலைமையகத்தை இலங்கையில் நிறுவுவதற்கு பிராந்திய நாடுகள் தீர்மானமொன்றைஎட்டியுள்ளன.

# தமிழர்களின் நிலைப்பாடுகளை கருத்தில் கொள்ளாத "இமயமலை பிரகடனத்தை" தமிழ் சமூக அமைப்புகள் கூட்டாக நிராகரிப்பு!!

**இமயமலை பிரகடனத்தை" தமிழ் சமூக அமைப்புகள், மாணவர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் மதத்தலைவர்கள் கூட்டாக நிராகரிக்கின்றனர்.**

பக்கம்-08

# தமிழர் பகுதியில் பெய்துவரும் பலத்த மழை! வெள்ளத்தில் மூழ்கிய வீடுகள்...!











# மகிந்தவின் சூளுரை மீண்டெழ முடியாத வலியின் வெளிப்பாடு!



## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பெரமுன கட்சியின் மாநாட்டில் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்று ஆற்றிய உரை ராஜபக்ச குடும்பத்தின் அரசியலுக்கு வீழ்ந்த அடியின் வலியையும் வேதனையையும் வெளிப்படுத்தியுள்ளது .

கடந்த காலங்களை விட மிகக் குறைந்த மக்கள் எண்ணிக்கையில் நடைபெற்ற கூட்டத்தில் மகிந்தவின் சூளுரை மக்கள் மத்தியில் ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் தோல்வியடைந்து விட்டது என்பதை காட்டியுள்ளது என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் குறிப்பிடுகையில் விடுதலைப் புலிகளின் தலைவரை தனக்கு முன்பிருந்த ஜனாதிபதிகளால் தோற்கடிக்க முடியவில்லை தானே வெற்றி கொண்டேன் என மீளவும் சிங்கள மக்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டமை ராஜபக்ச குடும்பத்தில் மக்கள் வெறுப்புக் கொண்டதன் உச்ச வெளிப்பாடே ஆகும் அத்துடன் யுத்தம் முடிந்து 14 ஆண்டுகளாக ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டி தீர்வு கேட்கும் தமிழரின் நிலைப்பாட்டை மறைத்து நாட்டைப் பிரிக்க பிரிவினை வாதத்திற்கு தான் ஒருபோதும் துணை போக மாட்டேன் என மகிந்த உணர்ச்சி வசப்பட்டமை மேலும் அவரது இனவாதத்தையும் அரசியல் வறுமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

விடுதலைப்புலிகளை சர்வதேச நாடுகளின் உதவியுடனும் சூழ்ச்சியுடனும் தோற்கடித்ததை சிறிது காலத்தில் மறந்தமையினால் தான் அதே சர்வதேச நாடுகளினால் ராஜபக்சாக்கள் சொந்த மக்களால் விரட்டப்பட்டனர் என்பதை மகிந்த ராஜபக்ச மறந்திருக்க வாய்ப்பில்லை.

சிங்கள மக்களிடம் தொடர்ந்து தமிழர்களை பிரிவினை வாதிகளாக காட்டி அரியனை ஏறும் எண்ணம் ராஜபக்ச குடும்பத்திற்கு இருந்தால் அதனை சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ள தயார் என்றால் நாடு நிரந்தரமாக மீண்டெழ முடியாத நிலைக்கு சென்றுவிடும்.

## இந்தியப் பெருங்கடல்...

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்புத் தலைமையகத்தை இலங்கையில் நிறுவுவதற்கு பிராந்திய நாடுகள் தீர்மானமொன்றை எட்டியுள்ளன.மொரிஷியஸில் நடைபெற்ற பாதுகாப்பு ஆலோசகர்களின் மாநாட்டில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதுடன், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கொழும்பு பாதுகாப்பு அறிக்கையும் இங்கு வெளிப்படுத்தப்பட்டது.

இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளின் கடல் மற்றும் தென்னாப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் திரு.சாகல ரத்நாயக்க, மேற்படி பிரேரணையை முன்வைத்துள்ளதுடன், மாநாடு அதற்கு இணங்கியுள்ளது. இதனால், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளும் இலங்கையை மையமாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றன.

இந்தியப் பெருங்கடல் பாதுகாப்புத் தலைமையகம் எதிர்வரும் ஜனவரி மாதம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிறுவப்பட்டு, பின்னர் நிரந்தரக் கட்டிடத்தில் நிறுவப்படும்

## இனவாதத்தைத் தூண்ட...

பொலிஸார் இனவாதத்தை தூண்ட முயற்சிப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் குற்றச்சாட்டு
இனவாதத்தை தூண்டிவிட்டு தமிழர்களின் உரிமையினை மறுப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துவருவதை மட்டக்களப்பு மயிலத்தமடு சம்பவம் நிரூபித்துள்ளதாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மயிலத்தமடுவிற்கு தமிழ் தேசிய மக்கள் முன்ன ணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உட்பட பலர் சென்ற நிலையில் பொலிஸாரி னால் உட்செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதன்போது அம்பிட்டிய சுமனரத்ன தேரரிர் தலைமையிலான குழுவினர் வருகைதந்து விளைவித்த குழப்பத்தினை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கிருந்து திரும்பிச்சென்றனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி செயலாளரின் அறிவுறுத்தலையும் மீறிய வகையில் பொலிஸாரின் செயற்பாடுகள் காணப்பட்டதாகவும் இதன்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

KIRUBAA LEARNERS
கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
நல்ல சாரதி எப்பொழுதும் வீதி ஒழுங்குப்பற்றி விழிப்புடன் இருப்பார்.
பெண்களாலேயே பெண்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

NO.1 சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 | 021 492 3200 | 077 722 5292

# நிலவும் சீரற்ற வானிலை…! கிளிநொச்சியில் 3440 பேர் பாதிப்பு…

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிய சீரற்ற வானிலையால் சீரற்ற வானிலையால் 1086 குடும்பங்களை சேர்ந்த 3440 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று(16) மதியம் வெளியிடப்பட்ட புள்ளி விபரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில், 247 குடும்பங்களை சேர்ந்த 834 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 04 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில், 839 குடும்பங்களை சேர்ந்த 2606 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 16 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அப்புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளம் வடிந்து வரும் நிலையில், தொடர்ந்தும் புள்ளி விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றது. இதேவேளை, பாதிக்கப்பட்டவர்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் மக்களுக்கான எதிர்வு கூறல் உள்ளமையால், மக்கள் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# தொடரும் மழை வவுனியாவில் பெருமளவானோர் பாதிப்பு!

தொடரும் மழை காரணமாக வவுனியா வடக்கில் 22 குடும்பங்களை சேர்ந்த 84 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

**பெருமளவானோர் பாதிப்பு**

குறிப்பாக, மாறா இலுப்பை பகுதியில் 05 குடும்பங்களை சேர்ந்த 22 பேரும், சின்னடம்பன் பகுதியில் 09 குடும்பங்களை சேர்ந்த 35 பேரும் இடம்பெயர்ந்த நிலையில் இரு பொது மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நைனாமடு பகுதியில் 02 குடும்பங்களை சேர்ந்த 06 பேரும், நெடுங்கேணியில் 06 குடும்பங்களை சேர்ந்த 21 பேரும் இடம்பெயர்ந்து உறவினர்களின் வீட்டில் தஞ்சமடைந்துள்ளதாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# பெண்கள் பாதுகாப்பு இல்லம். கிழக்கு ஆளுநரால் திறந்து வைப்பு.



கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமானது USA ID SCORE அமைப்புக்களுடன் இணைந்து சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயற்பாடு திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக அமைக்கப்பட்ட பாதுகாப்பு இல்லம் உத்தியோகபூர்வமாக வெள்ளிக்கிழமை (15) திறந்து வைக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, திருகோணமலை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பிரதான பிரச்சனைகளாக பாலியல் சமத்துவமின்மை,பாலியல் ரீதியான வன்முறைகள், இளம் வயது திருமணம், பாடசாலை இடைவிழகல், இளம் வயது கற்பம், போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிக அளவில் காணப்படுவதாக இணங் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்படும் பெண்களுக்கான தற்காலிக உடனடி பாதுகாப்பு நிவாரணமாக இந்த பாதுகாப்பு இல்லம் திருகோணமலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டு இவ் இல்லத்தை திறந்து வைத்தார்.

ஏனைய அதிதிகளாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.ரத்நாயக்க திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி, ,திருகோணமலை மாவட்ட பெண்கள் வளையமைப்பின் பணிப்பாளர் சட்டத்தத்தரணி பிரசாந்தினி உதயகுமார்,USAID அமைப்பின் ஜெயதேவன் கார்த்திக் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கந்தளாய் குள வான் கதவுகள் திறக்கப்படலாம்.



நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது கனமழை பெய்துவருவதன் காரணமாக பல நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்து வருவதுடன் வான்கதவுகளும் திறக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் நேற்று (16) காலை 7 மணியளவில் 109,450 ஏக்கர் அடியாகப் பதிவாகியுள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வரும் சந்தர்ப்பத்தில் வான் கதவுகள் திறக்கப்படலாம் என கந்தளாய் பிரதேச நீர்ப்பாசான பொறியியலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தம்பலகாமம் பிரதேச செயலக பகுதி கந்தளாய் பிரதேச செயலக பகுதி மக்களும் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே அவதானத்துடனும் முன்னெச்சரிக்கையாக இருக்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தமிழர் பகுதியில் பெய்துவரும் பலத்த மழை! வெள்ளத்தில் மூழ்கிய வீடுகள்...!





தொடரும் மீட்பு பணிகள்..

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் முற்று முழுதாக நிறைந்து வான் பாய்கின்ற நிலைமை காணப்படுகிறது

இவ்வாறான பின்னணியில் சற்று முன்னர் திடீரென வந்த வெள்ளம் காரணமாக ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் புளியங்குளம் பண்டாரவன்னி உள்ளிட்ட கிராம மக்களின் வீடுகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் பலர் வெள்ளத்தில் சிக்கியுள்ளதுடன் அவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக இடம்பெற்றுவருகிறது

இதேபோன்று குளங்களுக்கான நீர் வரத்து மிக வேகமாக காணப்படுகின்ற நிலைமையில் பல்வேறு குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தையும் எதிர்கொண்டுள்ளதோடு வான் பாய்கின்ற நீர் மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளமையினால் மக்கள் மிக அவதானமாக செயல்படுமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை இன்று காலை 9 மணி வரையான தகவல் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 261 குடும்பங்களை சேர்ந்த 870 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச்சடம்பன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 127 குடும்பங்களை சேர்ந்த 423 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை , தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 44 குடும்பங்களை சேர்ந்த 136 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம்,உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான்,மல்லாவி,யோகபுரம் கிழக்கு, புகழேந்திநகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 86 குடும்பங்களை சேர்ந்த 267 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு, மற்றும் தேவிபுரம் கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 177 குடும்பங்களை சேர்ந்த 415 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையிலே மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 695 குடும்பங்களை சேர்ந்த 2117 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 4 குடும்பங்களை சேர்ந்த 17 பேரும் புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களை சேர்ந்த 21 பேரும் பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவில் 19 குடும்பங்களை சேர்ந்த 55 பேருமாக 28 குடும்பங்களை சேர்ந்த 93 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.









# நுளம்பு அதிகரித்தால் டெங்கை கட்டுப்படுத்த முடியாது! அனைத்து தரப்பினரும் சிரமதானப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.!

## பொது வைத்திய நிபுணர் ரி.பேரானந்தராஜா தெரிவிப்பு.




இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்து தலையிடி, சத்தி, வயிற்றோட்டம், மூட்டு நோ போன்ற நோய் அறிகுறிகள் வந்தால் அருகில் உள்ள அரச வைத்தியசாலையை நாட வேண்டும் என பொது வைத்திய நிபுணர் ரி.பேரானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், இரண்டு நாட்களுக்கு குறைவாக காய்ச்சல் இருக்குமானால் நன்றாக ஓய்வெடுத்து நீராகாரத்தை குடித்தால் நன்று.

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்து தலையிடி, சத்தி, வயிற்றோட்டம், மூட்டு நோ போன்ற நோய் அறிகுறிகள் வந்தால் அருகில் உள்ள அரச வைத்தியசாலையை நாடுவது நல்லது.

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் கர்ப்பிணிகள், நீரிழிவு நோயாளர்கள், வேறு நோயுள்ளவர்கள், வீட்டில் பராமரிக்க ஆட்கள் இல்லாதவர்கள் நோய் நிலை ஏற்பட்டால் வைத்தியசாலையை நாட வேண்டும்.

குருதிப் பரிசோதனையில் வெண்கலங்களின் எண்ணிக்கை 5000ற்கு குறைவாகவும் குறுதிச்சிறுதட்டு எண்ணிக்கை 130000ற்கு குறைவடைந்தால் வைத்தியசாலையை நாட வேண்டும்.

நுளம்பு இடும் முட்டை வரட்சியான காலத்தில் ஆறு மாதங்களுக்கு இருக்கும். மழை காலங்கள் மற்றும் நீர் தேங்கும்போது நுளம்பு பரவும்.வீடு, சுற்றாடல், வீதி என்பவற்றை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். நுளம்பு அதிகரித்தால் டெங்கை கட்டுப்படுத்த முடியாது.

பாடசாலை பல்கலைக்கழக மாணவர்கள் அரச தனியார் ஊழியர்கள் சிரமதான நடவடிக்கையில் ஈடுபட்டு நீர் தேங்காதவாறு சூழலை பேணவேண்டும்.

டெங்கு நுளம்பு காலை வேளையிலும் மாலை வேளையிலும் அதிகம் உலாவுகிறது. குறித்த நேரங்களில் வெளியில் உலாவுவதை தவிர்க்க வேண்டும். நுளம்பு வலைகளை பாவிக்க வேண்டும். உடலில் நுளம்பு கடிக்காதவாறு தைலங்களை பயன்படுத்த முடியும் - என்றார்.

# வடகிழக்கு கடல் பிராந்தியத்தில் காற்று சுழற்சி வங்காள விரிகுடாவில் எதிர்வு கூறல்!

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெய்து வருகிற மழையானது எதிர்வரும் 19ஆம் திகதி வரை தொடரக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது என யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கீழாக காணப்படுகின்ற காற்றடுக்கு சுழற்சி காரணமாக தற்பொழுது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகிறது.

மழை தொடரும் சாத்தியம்
அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையின் தென்கிழக்காக தென்மேற்கு வங்காள விரிகுடா கடல் பிராந்தியம் மற்றும் அதனையொட்டிய நிலநடுக்கோட்டு இந்திய பெருங்கடல் (Equatorial Indian Ocean) பிராந்தியத்தில் வெள்ளிக்கிழமை தினம்(15) காணப்பட்ட காற்று சுழற்சியானது இன்று (16.12.2023) காலை 08.30 மணியளவில் நிலநடுக்கோட்டு இந்திய பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் இலங்கையின் தெற்காக கடல் மட்டத்திலிருந்து 3.1மஅ உயரத்தில் காணப்படுகின்றது.

இது தொடர்ச்சியாக மேற்கு நோக்கி நகர்ந்து மன்னார் வளைகுடாவின் தெற்கு - தென்கிழக்காக, அதன் பின்னர் குமரிக்கடல் பிரதேசத்தின் தெற்கு பகுதி வழியாக எதிர்வரும் 18ஆம் திகதியளவில் அரபிய கடலை பிரதேசத்தை அடையும்.

இந்த நிகழ்வின் காரணமாக இலங்கையில் பல இடங்களில் மழை தொடரும் சாத்தியம் காணப்படுகின்றது.

புதிய காற்று சுழற்சி
இதேவேளை சுமத்ரா தீவு அருகே அந்தமான் கடல் பிராந்தியத்தின் தெற்காகவும் இந்திரா முனைக்கு தெற்காகவும் இன்னுமொரு புதிய காற்று சுழற்சி உருவாகியள்ளது.

இதுவும் எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதிவரையான காலப் பகுதிகளில் மழையை ஏற்படுத்தும். இந்த புதிய நிகழ்வானது இலங்கைக்கு சற்று நெருக்கமாக வரும் என எதிர்பார்க்கப்படுவதன் காரணத்தினால் மழையின் அளவும் இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் சற்று அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என தெரிவித்துள்ளார்.

# தமிழரசுக் கட்சி உடையுமா?



தமிழரசுக் கட்சியின் தலைவர் யார் என்பதை தெரிவு செய்வதற்கு வரும் ஜனவரி மாதம் தேர்தல் நடக்கவிருக்கிறது. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி அது. அக்கட்சித் தலைவரை இதுவரை காலமும் தேர்தல் இன்றி ஏகமனதாக தெரிவு செய்து வந்தார்கள். அதாவது போட்டிக்கு ஆள் இருக்கவில்லை. ஆனால் இம்முறை போட்டி ஏற்பட்டிருக்கிறது. இப்போட்டிக்குக் காரணம் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அந்த பதவியை அடைய விரும்புவதுதான்.

கடந்த 14 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின் பட்டத்து இளவரசர் போல சுமந்திரனே தோன்றினார். அதை நோக்கி அவர் தன்னை வளர்த்துக் கொண்டார். உள்ளூராட்சி சபை, மாகாண சபை போன்ற எல்லா மட்டங்களிலும் அவர் தன்னுடைய ஆதரவுத் தளத்தைப் பெருக்கிக் கொண்டார். அதற்கு முது தலைவராக இருந்த சம்பந்தரின் ஆசிர்வாதமும் இருந்தது. அதாவது பல ஆண்டுகளாகத் தலைமைப் பதவியை இலக்கு வைத்து திட்டமிட்டு உழைத்தவர் சுமந்திரன்.

அவரிடமிருந்த மொழிப்புலமை, சட்டப் புலமை, நிதிப் பலம் போன்றவை காரணமாக அவர் திட்டமிட்டுத் தன்னுடைய நிலையை பலப்படுத்தி வந்தார். சிறீதரன் அவருக்கு சவாலாக எழாதவரை அவர்தான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட வேண்டிய ஒரு தலைவர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது சிறீதரனும் அவரும் இணைந்து செயல்பட்டார்கள். சிறீதரன் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்றும் அழைத்தார். அது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியது.

கட்சிக்குள் சுமந்திரனின் எழுச்சி என்பது கடந்த 14 ஆண்டுகளிலும் படிப்படியாக திட்டமிட்டு கட்டியெழுப்பப்பட்ட ஒன்று. சம்பந்தர் அதைத் தொடங்கி வைத்தார். கட்சியை தீவிரவாத நீக்கம் செய்ய வேண்டும், சிங்கள மக்களின் நன்மதிப்பை வென்றெடுக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து சம்பந்தர் உள்ளே கொண்டு வந்தவர்தான் சுமந்திரன். ஆயுதப் போராட்டமானது சிங்கள மக்களைப் பகை நிலைக்குத் தள்ளி விட்டது என்று சம்பந்தர் கருதினார். ஒரு தீர்வை பெறுவதாக இருந்தால் சிங்கள மக்களின் ஒப்புதல் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்கு கொழும்பை மையமாகக் கொண்ட மொழியாளுமை கொண்ட சுமந்திரனைப் போன்றவர்கள் விக்னேஸ்வரனைப் போன்றவர்கள் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சுமந்திரன், விக்னேஸ்வரன் போன்றவர்களை சம்பந்தர் கட்சிக்குள் இறக்கியமை என்பது தற்செயலானது அல்ல. அவரிடம் அதற்கென்று தெளிவான ஒரு வழிவரைபடம் இருந்தது. அதன்படியே காரியங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதனால்தான் சுமந்திரன் பட்டத்து இளவரசராக மேல் எழுந்தார்.

ஆனால் சம்பந்தரின் வழி தோற்றுவிட்டது. அவர் எதிர்பார்த்ததுபோல ஒரு தீர்வைப் பெற முடியவில்லை. அதுமட்டுமல்ல, அவர் உள்ளே இறக்கிய விக்னேஸ்வரன் அவருக்கு எதிராகத் திரும்பினார். அதன்பின் இறக்கப்பட்ட குகதாசன் எதிராகத் திரும்பி விட்டார். சுமந்திரன் சாணக்கியர் கூறியது போல "நண்டாக" மாறிவிட்டார். "இளவரசர்கள் நண்டுகளைப் போன்றவர்கள். அவர்கள் தகப்பனைத் தின்னிகள்" என்று சாணக்கியர் கூறுவார். மொத்தத்தில் சம்பந்தர் ஒரு தோல்வியுற்ற தலைவராக ஓய்வு பெறப் போகின்றாரா?.

ஆனால் அவர் தமிழ் அரசியலைச் சீரழித்து விட்டார். கடந்த 14 ஆண்டுகளில் அவரால் உருப்படியான ஒரு தீர்வை பெற்றுத்தர முடியவில்லை. கூட்டமைப்பு என்ற ஐக்கிய கட்டமைப்பையும் பாதுகாக்க முடியவில்லை. அவருடைய வாரிசுகளே அவரைத் தூக்கி எறியும் ஒரு நிலை. அவர் கடந்த 14 ஆண்டுகளாக திட்டமிட்டு முன்னெடுத்த அரசியல் வழியின் விளைவாக அவருடைய சொந்தக் கட்சிக்குள்ளேயே சிதைவுகள் தொடங்கிவிட்டன.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறீதரன் சுமந்திரனின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்தார். அதனால்தான் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்றும் அழைத்தார். ஆயின் இப்பொழுது சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையே ஏற்பட்டிருப்பது தனிப்பட்ட முரண்பாடா? அல்லது, கொள்கை முரண்பாடா? கூட்டமைப்புத் தேய்ந்து தமிழரசுக் கட்சியாகியதற்கு சுமந்திரனையே பலரும் குற்றஞ்சாட்டுவதுண்டு. சிறீதரனின் செல்வாக்கு அடித்தளமாக காணப்படும் கிளிநொச்சிக்குள் சுமந்திரன் தனக்கு ஆதரவான ஒரு சிறு அணியை உருவாக்கி வைத்திருக்கிறார். ஏற்கனவே சிறீதரனோடு இருந்தவர்கள் அவர்கள். சிறீதரனின் கோட்டைக்குள் சுமந்திரன் ஊடுருவ முற்பட்டமையும், முரண்பாடுகள் தீவிரமடைய ஒரு காரணம்.

முதலில் இருவருக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுகளை பார்க்கலாம். சுமந்திரன் புரட்டஸ்தாந்து பாரம்பரியத்தில் வந்தவர். கொழும்புமைய வாழ்க்கைக்கு அதிகம் பழக்கப்பட்டவர். கொழும்புமைய உறவுகளைக் கொண்டவர். ஒரு தமிழ் மக்களின் பிரதிநிதியாக கொழும்பில் தன் செல்வாக்கை மேலும் பலப்படுத்திக் கொண்டவர். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஓர் ஊடக முதலாளி ஒருமுறை சொன்னார் "தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வருகிறார். அதேசமயம் தென்னிலங்கையில் அவர் அரசியல் உயர் குழாம், படைத்துறை உயர் குழாம், புத்திஜீவிகள், ஊடகங்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவராக வளர்ந்திருக்கிறார். தென்னிலங்கை அரசியலில் அதிகம் செல்வாக்கு மிக்க ஒரு தமிழ் அரசியல்வாதி அவர்தான். தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் கொழும்பில் ஒரு பிரமுகராக வலம் வருகிறார்" என்று.

தனது மொழிப்புலமை, வாழ்க்கைப் பின்னணி காரணமாக சுமந்திரன் தென்னிலங்கையில் மட்டுமல்ல, உலக அளவில் ராஜதந்திரிகள் மத்தியிலும் ராஜதந்திர வட்டாரங்களிலும் அதிகம் தெரியவந்த ஒருவராகக் காணப்படுகிறார்.

இப்பொழுது சிறீதரனைப் பார்க்கலாம். அவருடைய வேர் தீவுகளில் இருக்கிறது. அவர் தன்னைப் பலப்படுத்திக்கொண்டது கிளிநொச்சியில். போராட்டப் பாரம்பரியத்தில் வந்தவர். அதிகம் உள்ளூர் பண்புடையவர். உள்ளூர் உணர்வுகளை அதிகம் பிரதிபலிப்பவர். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னரான ஒரு காலகட்டத்தில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தை பிரதிநிதித் துவப்படுத்தியவர் என்ற அடிப்படையில் அவருடைய பாரம்பரியம் அவருடைய வாழ்க்கை முறை போன்றன சுமந்திரனிட மிருந்து வேறுபாடானவை.

இந்த வேறுபாடுகளை சிறீதரனை ஆதரிப்பவர்கள் கொள்கை வேறுபாடுகளாக வியாக்கியானம் செய்கிறார்கள். சுமந்திரனின் அணுகுமுறை அதிகம் மிதவாதத் தன்மைமிக்கது இணங்கிச் செல்லும் தன்மை மிக்கது. அதனை அவருடைய கொழும்புமைய நிலையான நலன்கள் பெருமளவுக்குத் தீர்மானிக்கின்றன. ஆனால் சிறிதரனின் அணுகுமுறை அதிகம் எதிர்ப்புத்தன்மை மிக்கது. ஒப்பீட்டளவில் சுமந்திரனை விடத் தீவிரமானது.

எதுவாயினும் ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால், அதாவது தேர்தலை தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்றால், தேர்தலில் இருவருக்கும் இடையிலான முரண்பாடு கொள்கை முரண்பாடாகவே காட்டப்படும். சிலசமயம் அது பிரதேச வாதமாகவோ அல்லது மத வாதமாகவோ மாறக்கூடிய ஆபத்துகளும் உண்டு.

அதை ஒரு கொள்கை வேறுபாடாக காட்டுவது சிறீதரனுக்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக இருக்கும். அனுகூலமாகவும் இருக்கும். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கும் கொழும்பு மைய தமிழ் நிலைப்பாட்டுக்கும் இடையிலான ஒரு மோதலாக அதை உருவகித்தால் தனக்கு அதிகரித்த ஆதரவு கிடைக்கலாம் என்று அவர் நம்பக்கூடும். அதாவது கொள்கை அடிப்படையில் தன் பக்கம் பலமாக உள்ளது என்று அவர் நம்பக்கூடும்.

மிகுதி 07 ஆம் பக்கத்தில்...

# தமிழரசுக் கட்சி உடையுமா?

ஆனால், கடந்த 14 ஆண்டுகளிலும் அப்படியெல்லாம் கொள்கை வழியில் கட்சிகள் கட்டியெழுப்பப்பட்டனவா?தமிழ் மக்கள் கொள்கைகளுக்கு வாக்களிக்கிறார்கள் என்பது ஒரு "டெம்ப்லட்" வகை வசனமாக மாறி வருகிறதா? ஏனெனில் தமிழ் அரசியல்வாதிகள் தமது விசுவாசிகள் கூட்டத்தை கொள்கை அடிப்படையில் கட்டியெழுப்பியதை விட அதிகமாக எதிர்கால நலன்களின் அடிப்படையில்தான் கட்டியெழுப்பி வைத்திருக்கிறார்கள்.

எந்த நாடாளுமன்ற உறுப்பினரோடு நின்றால் தனக்கு உள்ளூராட்சி சபையில் ஆசனம் கிடைக்கும் அல்லது மாகாண சபையில் ஆசனம் கிடைக்கும் அல்லது நாடாளுமன்றத்தில் ஆசனம் கிடைக்கும் என்று கணக்குப் பார்த்தே பெரும்பாலான தொண்டர்கள் தலைவர்களைச் சூழ்ந்து காணப்படுகிறார்கள். அதாவது தேர்தல் மைய நோக்கு நிலையில் இருந்து சிந்தித்தே பெரும்பாலான கட்சி வலைப் பின்னல்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. யாரோடு நின்றால் கட்சிக்குள் தங்களுடைய அடுத்தடுத்த கட்டப் பதவி உயர்வுகளைப் பாதுகாக்கலாம் என்றுதான் பெரும்பாலான கட்சித் தொண்டர்கள் சிந்திக்கிறார்கள்.

கொள்கைகளால் உருகிப் பிணைந்த ஒரு கட்டமைப்பாக கட்சி இருந்திருந்தால் கட்சிக்குள் உடைவு வரும்பொழுது அதை நாகரிகமாக கடந்து போக தெரிந்திருக்கும். சமூக வலைத்தளங்களில் நிகழும் மோதல்களில் தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் குறைந்தபட்ச அரசியல் நாகரீகமாவது பேணப்பட்டு இருந்திருக்கும்.

ஆனால் அதைக் காணவில்லை.இது தமிழரசு கட்சிக்குள் மட்டும் நடக்கவில்லை. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குள்ளும் நடந்தது.மணிவண்ணன் பிரிந்தபோது அதைக் காண முடிந்தது.நேற்றைய தோழன் இன்றைய துரோகி. இவ்வாறு முன்னாள் தோழர்களை இந்நாள் துரோகிகளாக்கும் அரசியல் பண்பாடு புதியது அல்ல.இது தமிழ் ஆயுத அரசியலில் இருந்து மிதவாத அரசியல் வரை உண்டு.

ஏற்கனவே பல தசாப்தங்களுக்கு முன்பு தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் கொங்ரசுக்கும் இடையே மோதல்களின்போது, இரு கட்சி ஆதரவாளர்களும் மல முட்டிகளை பயன்படுத்துவார்கள்.அதாவது மண் முட்டிகளுக்குள் மலத்தை நிரப்பிக் கொண்டு வந்து எதிராளியின் வீட்டு முற்றத்தில் உடைத்து விட்டுப் போவார்கள்.அதே மலமுட்டிப் பாரம்பரியம் இப்பொழுது சமூக வலைத்தளங்களுக்கும் வந்துவிட்டது. முன்பு கட்சிகளுக்கு இடையே அது இருந்தது.இப்பொழுது கட்சிகளுக்குள்ளேயே வந்துவிட்டது.அது தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் ஒர் அரசியல் பண்பாடு அல்ல. கொள்கைப் பற்றுறுதி இருந்தால் அப்படியெல்லாம் பொது வெளியில் விமர்சனங்கள் வராது. தமிழ்க் கட்சிகளின் விசுவாசக் கட்டமைப்புக்கள் பெருமளவுக்கு கொள்கையை விடவும் எதிர்காலப் பதவி உயர்வுகளை மையமாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டவைதான்.

இப்படிப்பட்டதோர் அரசியற் சூழலில் தமிழரசுக் கட்சிக்குள், தலைவருக்கான ஒரு தேர்தல் நடந்தால்,அது தமிழரசியலின் ஜனநாயகச் செழிப்பை நிரூபிக்குமா? அல்லது தேசத் திரட்சியை உடைக்குமா? தேர்தலில் யார் வென்றாலும் குறிப்பாகக் கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சிக்குள் உடைவு ஏற்படுமா?

**நிலாந்தன்**

# கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் அணைக்கட்டில் பாதிப்பு! களத்தில் இறங்கிய இராணுவத்தினர்!



கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தில் ஏற்பட்ட பாதிப்பினை சீர் செய்யும் நடவடிக்கை இராணுவத்தினரின் உதவியுடன் ஆரம்பமானது.

புதுமுறிப்பு குளத்தின் அணைக்கட்டில் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் நேற்று அடையாளம் காணப்பட்ட நிலையில், பாதுகாப்பு நடவடிக்கைக்கு இடர் முகாமைத்துவ பிரிவு தயாராகியது.

தொடர் மழை காரணமாக குளக்கட்டில் ஏற்பட்ட மண்ணரிப்பு அவதானிக்கப்பட்டு, நீர்பாசன பொறியியலாளர்களால் ஆராயப்பட்டுள்ளது.

ஆபத்தான நிலை ஏற்படாத நிலையை அவதானித்த பொறியியலாளர்கள், பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, இன்று காலை இராணுவத்தினரின் உதவியுடன் பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நீர்பாசன திணைக்களத்தினர், பொறியியலாளர்களின் கண்காணிப்பில் குறித்த பணிகள் ஆரம்பமானது.

விவசாயிகளும் குறித்த பணியில் ஈடுபட்டனர்.

11 வது கஜபாகு பிரிவினர் 40 பேர் வரை குறித்த பணியில் ஈடுபட்டுள்ளனர். குளக்கட்டின் ஊடான போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதுடன், காட்டின் பல பகுதிகளிலும் மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

# மக்களுக்கு மகிழ்ச்சி தகவல் குறைவடைந்த மரக்கறி விலை

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை குறைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் மரக்கறிகளின் விலை வேகமாக உயர்ந்து வரும் நிலையில் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் இவ்வாறானதொரு நிலை பதிவாகியுள்ளமை விசேட அம்சமாகும்.

மரக்கறித் தேவைகளில் எழுபது வீதமானவை
நாட்டின் மரக்கறித் தேவைகளில் எழுபது வீதமானவை தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தினால் பூர்த்தி செய்யப்படுகிறது.

நுகர்வோருக்கு பயனில்லை
தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் தேவை மற்றும் விநியோகத்திற்கு ஏற்ப மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும், மரக்கறிகளின் விலை குறைவினால் நுகர்வோருக்கு பலன் கிடைக்கவில்லை எனவும் தம்புள்ளை பொருளாதார நிலைய வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

சில்லறை விற்பனையாளர்களின் விற்பனைக்கு மொத்த வியாபாரிகள் பொறுப்பேற்க முடியாததே இதற்குக் காரணம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்



# தமிழர்களின் நிலைப்பாடுகளை கருத்தில் கொள்ளாத "இமயமலை பிரகடனத்தை" தமிழ் சமூக அமைப்புகள் கூட்டாக நிராகரிப்பு!!

தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை கருத்தில் கொள்ளாத "இமயமலை பிரகடனத்தை" தமிழ் சமூக அமைப்புகள், மாணவர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் மதத்தலைவர்கள் கூட்டாக நிராகரிக்கின்றனர்

சிறந்த இலங்கைக்கான சங்கா (SBSL) மற்றும் Global Tamil Forum (GTF) ஆகியவற்றின் சமீபத்திய "இமயமலை பிரகடனம்" பற்றி வடக்கு கிழக்கை தளமாகக் கொண்ட, கீழ் கையொப்பமிட்ட அமைப்புகளாகிய நாங்கள் கூட்டாக இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம்.

இமயமலைப் பிரகடனத்தை ("பிரகடனம்") நாம் கவனமாக வாசித்தோம். ஆனால் இந்த பிரகடனம் தமிழ் மக்களின் கருத்துக் களையோ, இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதத்தினால் அனுபவித்த துன்பங்கள், கொடுமைகளையோ கருத்தில் கொள்ளாமை தொடர்பில் நாம் எமது கடும் அதிருப்தியை வெளியிடுகின் றோம்.

வெளிப்படையாகவே பௌத்த மதகுருமார் தமிழ் மக்களின் துன்பங்கள் தொடர்பான தெளிவு அற்றவர்களாகவே உள்ளார்கள். ஏனெனில் அவர்கள் தமிழ் பகுதிகளுக்கு வெளியே சிங்களவர்களிடையே வாழ் கிறார்கள். மேலும் நாம் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் அடக்கு முறைகள் தொடர்பாக அவர்கள் எவ்வித கரிசனைகளையும் கொண்டிருக்க வில்லை.

பதினான்கு வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர், 2021ம் ஆண்டு, பொத்துவில் தொடக்கம் பொலி கண்டி வரை மக்கள் பேரெழுச்சியின் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தியுள்ளோம். சிறிலங்கா இராணுவத்தின் மிரட்டல்கள், அச்சுறுத் தல்கள் மற்றும் கைதுகளுக்கு மத்தியிலும் ஏறக்குறைய சுமார் ஐந்து இலட்சம் தமிழர்கள் இணைந்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை ஐந்து நாள் மக்கள் பேரெழுச்சி மூலம் தமிழ் இனத் தின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி இருந்தனர். தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களும், காணாமல் ஆக்கப் பட்டவர்களின் குடும்பங்கள் போன்ற பாதிக்கப்பட்ட அமைப்பினரும் பல போராட் டங்களையும் பேரணிகளையும் நடத்தி தமிழர்களின் நிலைப்பாட்டினை தொடர்ந் தும் வெளிப்படுத்தி வருகின்றனர். இவை எதுவும் இந்த "பிரகடனத்தில்" கவனத்தில் கொள்ளப்படவில்லை. கடந்த பதினான்கு ஆண்டுகளாக தமிழர்களால் வெளிப் படுத்தப்பட்ட தமிழ் மக்களின் நிலைப் பாட்டினை அனைவரின் கவனத்திற்கும் மீண்டும் கொண்டுவர விரும்புகிறோம்.

1. போருக்கு முந்தைய 1983ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த அளவிற்கு தமிழர் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தை குறைத்தல். போர் முடிவடைந்து பதி னான்கு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் மே 2009 இல் போரின் உச்சக்கட்டத்தில் இருந்ததைப் போலவே மோசமான அளவில் இராணுவ கட்ட மைப்பு தமிழர் தாயகத்தில் பராமரிக்கப் பட்டு வருகிறது. தமிழ் இனப்படுகொலை மற்றும் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தல் போன்ற பல கொடூரமான குற்றங்களை மேற்கொண்ட சிறிலங்கா ஆயுதப்படை தமிழர் நிலங்களில் தொடர்ந்து நிலை கொண்டிருப்பது, தமிழ் மக்களை தொடர்ந் தும் அச்ச சூழ்நிலையில் வைத்திருப் பதுடன் பல்வேறு சமூக பிரச்சனை களையும் ஏற்படுத்துகின்றது.

2. ஐ.நா அதிகாரிகளின் முன்மொழிவு களுக்கு அமைவாக சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) பாரப்படுத்தவும். 2009 இல் நடந்த போரின் இறுதி ஆறு மாதங்களில் ஏறக்குறைய எழுபதாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டமை ஐ.நா. உள்ளக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இவ்வினவழிப் பினையும் போர்குற்றங்களையும் நடாத் திய ஒரு பாதுகாப்புப் படை அதிகாரிகளோ அல்லது அரசியல் தலைவர்களோ நீதியை எதிர்கொள்ளவில்லை. மனித உரிமை களுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் உட்பட பல ஐ.நா அதிகாரிகள் பரிந்துரைத்தது போல சிறிலங்காவை சர்வதேச குற்ற வியல் நீதிமன்றத்திற்கு (ICC) பரிந்துரைக் குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

3. சிறிலங்கா இராணுவம் உட்பட்ட அரசு நிறுவனங்களின் உதவியுடன் பல வரலாற்று சிறப்பு மிக்க சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டு, சிங்களவர்கள் பூர்வீகமாக வசிக்காத தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு எங்கும் பௌத்த கோயில்கள் கட்டப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

4. தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் முனைப்புடன் சிங்கள பௌத்த அரச துணையுடன் தமிழர் தாயகம் எங்கும் இடம்பெறும் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களும் காணி அபகரிப்புகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5. மீண்டும் ஒரு இனவழிப்பும் இரத்தக் களரியும் இந்த தீவில் ஏற்படுவதைத் தடுக்க, இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வினை ஏற்படுத்தும் விதமாக தமிழ் மக்களிடையே சர்வதேசத்தினால் பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும்: இலங்கை சுதந்திரம் பெற்ற தில் இருந்து நீடித்து வரும் இனப்பிரச் சினைக்கு காரணம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படாமையே ஆகும். இதன் விளைவாக 1958, 1977, 1983 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் பாரியளவில் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் தலைவர்களுக்கும் சிங்கள பெரும்பான்மை அரசுகளுக்கும் இடையிலான பல உடன்படிக்கைகள் தொடர்ந்து வந்த அரசுகளால் கிழித் தெறியப்பட்டன. இந்தியா மற்றும் நோர்வே மேற்கொண்ட சர்வதேச மத்தியஸ் தங்களும் கூட தோல்வியடைந்தன. உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில், குறிப்பாக பனிப்போர் முடிவடைந்த கடந்த முப்பது ஆண்டுகளாக, ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வுகளை காண பொதுவாக் கெடுப்பு முறையே நடைமுறையில் உள்ளது. இந்த சர்வதேச நடைமுறை யையே தமிழர்களாகிய நாமும் தொடர்ந்து கோரி வருகின்றோம்.

நன்றி.

கையொப்பம் இட்டவர்களும், ஒப்புதல் அளித்தவர்களும்

தவத்திரு அகத்தியர் அடிகளார்
தென்கயிலை ஆதீனம் - திருகோணமலை

வண. பிதா. ஜோசப் மேரி (S J)
மட்டக்களப்பு

தவத்திரு வேலன் சுவாமிகள்
சிவகுரு ஆதீனம் - யாழ்ப்பாணம்
ஒருங்கிணைப்பாளர் - பொத்துவில் தொடக்கம்
பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்

வண. பிதா. ஜெயந்தன் பச்சாசெக் முஆஅ
அமலமேரி தியாகிகள் சபை - யாழ்ப்பாணம்

வண. பிதா. கந்தையா ஜெகதாஸ் - மட்டக்களப்பு
ஒருங்கிணைப்பாளர் - பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்

திருமதி சரோஜா சிவச்சந்திரன்
தலைவர் - பெண்கள் அபிவிருத்தி நிலையம்

திருமதி யோ. கனகரஞ்சினி
தலைவர் - வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்
உறவுகளின் சங்கம்
வடக்கு கிழக்கு மாகாணங்கள்

திரு. அ. விஜயகுமார்
தலைவர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியம்

திரு. விக்னேஸ்வரன் கஜரூபன்
பிரதிநிதி - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியம்
கலை, கலாசார பீடம்

திரு. சி. தங்கராஜா
தலைவர் - பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திருமதி. விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன்
தலைவர் - பெண்கள் ஒருங்கிணைப்பு
கண்காணிப்பு சங்கம் - வடக்கு கிழக்கு
மாகாணங்கள்

திருமதி மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன்
தலைவர் - உழைக்கும் மகளிர் அமைப்பு